## கலைஞர் கனவு இல்லத்திட்டத்தின் கீழ் வீடுகள் கட்ட ரூ.1400 கோடி கூடுதல் நிதி

# ரூ.19,287.44 கோடி அளவிற்கு இறுதி துணை மதிப்பீடுகள்!

## பேரவையில் நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு தாக்கல் செய்து பேச்சு!

**சென்னை, மார்ச் 22 -**

**தமிழ்நாடு அரசின் நிதி மற்றும் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள், 2024-25 ஆம் ஆண்டிற்கான இறுதி துணை மதிப்பீடுகளை 2025 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 21 ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவை முன் வைத்து ஆற்றிய உரை வருமாறு:**

2024-2025 ஆம் ஆண்டிற்கான இறுதி துணை மதிப்பீடுகளை இம்மாமன்றத்தின் முன் சமர்ப்பிக்கிறேன். துணை மானியக் கோரிக்கைகளை விளக்கிக் கூறும் விரிவான அறிக்கையினை இம்மாமன்றத்தின் முன் வைக்கின்றேன். இந்த அவையில் வைக்கப்பட்டுள்ள இந்தத் துணை மதிப்பீடுகள் மொத்தம் 19,287.44 கோடி ரூபாய் நிதி ஒதுக்கத்திற்கு வகை செய்கின்றன. இதில், 12,639.36 கோடி ரூபாய் வருவாய் கணக்கிலும், 6,429.20 கோடி ரூபாய் மூலதனக் கணக்கிலும்,



218.88 கோடி ரூபாய் கடன் கணக்கிலும் அடங்கும்.

2024 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 9 ஆம் நாளன்று 2024-2025 ஆம் ஆண்டிற்கான

முதல் துணை மதிப்பீடுகள் சட்டமன்றப் பேரவையில் செய்யப்பட்ட பின்னர், "புதுப்பணிகள்" தாக்கல் மற்றும் "புது துணைப்பணிகள்" குறித்து ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினங்களுக்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலைப் பெறுவது இத்துணை மதிப்பீடுகளின் முக்கிய நோக்கமாகும்.

துணை மதிப்பீடுகளில் கூடுதல் நிதியொதுக்கம் தேவைப்படும் சில முக்கிய இனங்கள் பின்வருமாறு:

- மானியக் கோரிக்கை எண்.13, "உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)", தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நிதி நிலைத்தன்மையை உயர்த்துவதற்கும், உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கும், பங்கு மூலதன உதவியாக 2,000 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.
- மானியக் கோரிக்கை எண்..42 "ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை", 'கலைஞரின் கனவு இல்லம்' திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டுவதற்காக 1,400 கோடி ரூபாய் கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.
- மானியக் கோரிக்கை எண்.14 "எரிசக்தித் துறை", மின் நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகைக்காக 1,036 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.
- மானியக் கோரிக்கை எண்.48 "போக்குவரத்துத் துறை", பேருந்துகள் வாங்குவதற்காக மாநிலப் போக்குவரத்துக் கழகங்களுக்கு கூடுதலாக 1,000 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- மானியக் கோரிக்கை எண்.51 "இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு",

2024ஆம் ஆண்டில் வடகிழக்கு மற்றும் தென்மேற்குப் பருவமழைக் காலங்களில் பெய்த கனமழை மற்றும் ஃபெஞ்சல் புயல் பாதிப்புகளின் துயர் தணிப்புப் பணிகளுக்காக 90184 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2024 - 2025 ஆம் ஆண்டிற்கான இறுதி துணை மதிப்பீடுகளை இம்மாமன்றம் ஏற்று இசைவளிக்க வேண்டுகிறேன்.

இவ்வாறு நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு துணை மதிப்பீட்டை தாக்கல் செய்து பேசினார்.



தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையில் தொகுதி மறுவரையறை குறித்து தென் மாநிலங்களின் முதலமைச்சர்கள், அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் கலந்துகொள்ள ஒரிசா காங்கிரஸ் தலைவர் பக்தா சரண் தாஸ், பிஜு ஜனதா தளம் சார்பில் முன்னாள் அமைச்சர் சஞ்சய் குமார் தாஸ் பர்மா மற்றும் முன்னாள் ராஜ்யசபா எம்.பி அமர் பட்நாயக் ஆகியோர் சென்னை விமான நிலையம் வருகைதந்தனர். அவர்களை நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன் மற்றும் கனிமொழி என்.வி.என். சோமு வரவேற்றனர்.

## முதலமைச்சர் தலைமையிலான இந்த அரசு பொறுப்பேற்றப் பிறகு

# 3 ஆயிரத்திற்கு மேற்பட்ட ரேஷன் கடைகள் புதிதாக உருவாக்கப்பட்டிருக்கின்றன!

## சட்டப்பேரவையில் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தகவல்!

சென்னை, மார்ச் 22-

சட்டப்பேரவையில் உறுப்பினர்களின் கேள்விகளுக்கு பதிலளித்த அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், முதலமைச்சர் தலை மையிலான இந்த அரசு பொறுப்பேற்றப் பிறகு, 3 ஆயிரத்திற்கு மேற்பட்ட ரேஷன் கடைகள் புதிதாக உருவாக்கப்பட்டிருக்கின்றன என குறிப்பிட்டார்.

இது குறித்து உறுப்பினர்கள் எழுப்பிய கேள்வியும் அமைச்சர் அளித்த பதிலும்

**என்.அசோக்குமார்:** பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கொளக்குடி ஊராட்சியில் உள்ள முழுநேர நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன்:** (அ) மற்றும் (ஆ) தஞ்சை மாவட்டம், பேராவூரணி சட்டமன்றத் தொகுதியில் சேது பாவாசத்திரம் ஒன்றியம், பெருமகளூர் தொடக்க வேளா ண்மை கூட்டுறவுச் சங்கத்தின்கீழ் கொளக்குடி என்ற முழுநேர நியாய விலைக் கடை வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. மேற்காணும் கொளக்குடி முழுநேர நியாய விலைக் கடைக்கு அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் மூலமாக 12 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு கட்டடம் கட்டுகின்ற பணி விரைந்து நடைபெற்று வருகிறது.

**என்.அசோக்குமார்:** அமைச்சர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அதுபோன்று, பேராவூரணி தொகுதியில் கிட்டத்தட்ட 25 கட்டடங்கள் பேராவூரணி பேரூராட்சி, பேராவூரணி, சேதுபாவாசத்திரம், திருவோணம், பட்டுக்கோட்டை ஒன்றியங்களில் 25 கட்டடங்கள் தேவைப்படுகின்றன. தயவுகூர்ந்து அந்தக் கட்டடங்களைக் கட்டுவதற்கு நிதி தருமாறு அன்புடன் கேட்டு அமர்கின்றேன்.

**அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன்:** கொளக்குடி ஊராட்சியைப் பொறுத்தவரையில்



அந்தக் கட்டடம் இப்போது அவருக்குக் கிடைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. கேள்வி சுற்றுவட்ட நிலையிலேயே அதற்கான விடையும் கிடைத்து இருக்கிறது. அதைப்போன்று இப்போது 25 கடைகள் என்று கோரிக்கை வைத்து இருக்கிறார்கள். அதுவும் வெகு விரைவிலே பரிசீலித்து நிறைவேற்றப் படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய 34,902 நியாய விலைக் கடைகளில், 6,215 கடைகள் தனியார் மற்றும் வாடகைக் கட்டடங்களில் செயல்படுகின்றன. அதில் 2,545 கடைகள் தற்போது சொந்தக் கட்டடங்களில் இயங்குவதற்கு, புதிதாக கட்டடப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மீதமுள்ள கடைகளும் வெகு விரைவில் சொந்தக் கட்டடங்களில் இயங்குவதற்கு துறைரீதியாக முழுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இதுபோன்று சொந்தக் கட்டடங்கள் இல்லாத நியாய விலைக் கடைகளை கண்டறிந்து, அவை அனைத்திற்கும் தீர்வு காண்பதற்கு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தி இருக்கிறார்கள். அது நிச்சயமாக நிறைவேற்றித் தரப்படும்.

**என்.அசோக்குமார்:** அமைச்சர் அவர்களுக்கு மீண்டும் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, பேராவூரணி பகுதியில் நிறைய அங்காடிகள் பிரிக்கப்பட வேண்டியிருக்கிறது. பேராவூரணி புதுத்தெரு, வீரராகவபுரம், துலுக்கவிடுதி, ஒட்டங்காடு, பூவலூர், பாலத் தளி, மணவயல், புக்கரம்பை ஊராட்சி, கொள்ளுக்காடு, நாடார் தெரு, கல்லூரணிக்காடு புதுத்தெரு, பூவணத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டும், அதுபோல சம்பை, ஆண்டிக்காடு, மருதங்கவயல், தேனங் காடு, புக்கரம்பை, கஞ்சங்காடு, குறவன்கொல்லை, கொள்ளுக்காட்டை இரண்டாகப் பிரிக்க வேண்டும். வீரியன் கோட்டையில் உள்ள ஆயிரம் கார்டுகளை பிரித்து முடச்சிக்காட்டிற்கு தனியாக ஒரு அங்காடி தர வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, கட்டப்படும் கட்டடங்களில், சமயத்தில் அளவு குறைவாக இருக்கிறது. அதில் மூட்டைகள் அடுக்கி வைப்பதற்கு சிரமமாக இருக்கிறது. கைரேகை வைப்பதில் நிறைய சிக்கல்கள் இருக்கின்றன. உணவுத் துறை அமைச்சர் அவர்கள், அருள்கூர்ந்து அதற்கு மாற்று ஏற்பாடு செய்து தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன்:** உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே இயங்கி வருகின்ற பல்வேறு நியாய விலைக் கடைகளை பிரித்து, புதிதாக கடைகளை உருவாக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார். அந்தக் கோரிக்கையில் நியாயம் இருக்கிறது. ஆனாலும், சில விதிமுறைகளை நாம் கடைபிடிக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். குறிப்பாக, நகர்ப்புறங்களை பொறுத்தவரை, 800 குடும்ப அட்டைகளுக்கு மேல் இருந்தால் அதைப் பிரிப்பதற்கு ஏற்பாடு செய்யலாம். அதேபோல், கிராமப் பகுதிகளில் 500 குடும்ப அட்டைகளுக்குமேல் இருந்தால் அதைப் பிரிப்பதற்கும், மலைப் பகுதிகளில் 400 குடும்ப அட்டைகளுக்கு மேல் இருந்தால் அதைப் பிரிப்பதற்கும் ஏற்பாடு செய்யலாம்.

ஆனால், அவ்வாறு தாய்க் கடைகளைப் பிரிக்கும் நேரத்தில், அந்தக் கடையிலிருந்து பகுதிநேர கடையோ அல்லது புதிதாக அமையக்கூடிய முழுநேர கடையோ, அதற்கு ஒன்றரை கிலோ மீட்டருக்கு குறையாத இடைவெளி இருக்க வேண்டுமென்பதையும், அவ்வாறு பிரிக்கும் போது தாய்க் கடையில் 500 அட்டைகள் தொடர்ந்து இருக்க வேண்டும். பகுதிநேர கடைகளில் 150 அட்டைகள் இருக்க வேண்டும் என்பதை உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். எனவே, உரிய கோரிக்கையை, முறையாக மாவட்ட அலுவலர்களிடம் கொடுத்தால், அவர்கள் ஆய்வு செய்து விதிகளுக்கு ட்பட்டு இருக்கின்ற அனைத்து தேவைகளையும் பூர்த்தி செய்வதற்கு தயாராக இருக்கிறார்கள்.

குறிப்பாக, நியாய விலைக் கடைகளை பொறுத்த வரையில், உணவு பொருள்கள் வழங்குவது சம்பந்தப்பட்டது என்ற காரணத்தால், அந்தப் பொருட்களைப் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும் என்பதோடு, எலிகள் போன்றவற்றிடம் இருந்து அதை பாதுகாக்கும் கடமையும் இருக்கிறது. ஆகவே, முதலமைச்சர் அவர்களைப் பொறுத்தவரை, அனைத்து கடைகளையும் சொந்தக் கடைகளாகவும், மேலும், பாதுகாப்பாக இருக்க வேண்டுமென்றும் அறிவுறுத்தி இருக்கிறார்கள். மேலும் இருக்கக்கூடிய கடைகளில், ஆண்டொன்றுக்கு 2,500 கடைகளைப் புதுப்பிக்கும் பணிகளும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**முனைவர் தாரகை கத்பட்:** விளவங்கோடு தொகுதிக்குட்பட்ட மலை கிராமங்களில் ration shopல் broadband connection மிகவும் slowஆக இருக்கிறது. அதை பரிசீலிக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன்:** உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல் broad band வசதியைப் பொறுத்தவரையில், மலைப் பகுதி என்று சொல்கிற காரணத்தால் ஏதாவது அசௌகரியங்கள் இருக்கலாம். அதையும் போக்குவதற்கான உரிய நடவடிக்கை எடுப்பதற்கு, மாவட்ட அலுவலர்களிடத்தில் அந்தத் தகவலைத் தெரிவித்தால், அது நிவர்த்தி செய்து தரப்படும்.

அதிலும், உறுப்பினர் என். அசோக்குமார் அவர்கள் உள்ளிட்ட உறுப்பினர்களும் குறிப்பிடுவதைப் பார்த்தால், கைரேகை சமாச்சாரத்தை பொறுத்தவரையில் உணவுத் துறையின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. ஆங்காங்கிருந்து வரக்கூடிய புகார்கள் உடனடியாக நிவர்த்திச் செய்யப்பட்டு கின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**கு. பிச்சாண்டி:** என்னுடைய கீழ்பெண்ணாத்தூர் சட்டமன்றத் தொகுதியில் இருக்கின்ற பல்வேறு கிராமங்களில் துணைக் கிராமங்கள் இருக்கின்றன. அவை இரண்டு கிலோ மீட்டர் தூரத்திலே இருக்கின்றன. அங்குள்ளவர்கள் ration பொருட்களைப் பெற வேண்டுமானால், இரண்டு கிலோ மீட்டர் தூரம் வர வேண்டிய நிலை இருக்கிறது. ஆனால், card குறைவாக இருக்கிறது என்பதற்காக அந்தக் கிராமங்களிலே பகுதி நேரக் கடைகள் திறக்கப்படாமல் இருக்கின்றன. நாங்கள் மக்களைச் சந்திக்கும்போது, மக்களுடைய மிக முக்கியமான கோரிக்கையாக இருப்பது, பகுதி நேரக் கடைகள் தேவை என்கின்ற நிலை எல்லா இடங்களிலிலும் இருக்கிறது.

என்னுடைய தொகுதியிலுள்ள கருங்கல்பட்டு, புதூர் போன்ற பல்வேறு கிராமங்களிலே அவை தேவையாக இருக்கின்ற காரணத்தால், எந்தெந்த இடங்களிலே இது போன்ற துணைக் கிராமங்கள் இருக்கின்றனவோ, அங்கெல்லாம் பகுதி நேரக் கடைகள் தமிழகம் முழுவதும் திறந்து வைத்தால், மக்களுடைய அந்தப் பிரச்சினைத் தீரும். அதை நம்முடைய அரசு கவனத்தில் எடுத்துக் கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு ஆவன செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன்:** துணை சபாநாயகர் அவர்கள் எழுப்பி இருக்கின்ற கோரிக்கையைப் போல, மக்கள் தங்களுடைய கோரிக்கைகளை மக்கள் பிரதிநிதிகளான நம்மிடத்திலே தருகிறார்கள். ஆனால், அதே நேரத்தில் அதைச் செயல்படுத்துவதற்கு அரசும் சில விதிகளை குறிப்பி ட்டிருக்கின்ற காரணத்தால், அந்த விதிகளும் மீறப்படாமல் இருக்க வேண்டும். அவர் நிலைமைகளை நன்குணர்ந்தவர். அவரும் பல கடைகளைப் புதிதாகத் தொடங்கியிருப்பது—குறிப்பாக, நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய தலைமையிலான இந்த அரசு பொறுப்பேற்றப் பிறகு மூவாயிரத்திற்கும் மேற்பட்ட கடைகள் புதிதாக உருவாக்கப்பட்டிருக்கின்றன என்பதையும், மூவாயிரம் கடைகளைப் புதிதாக திறந்து இருக்கின்ற நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய ஆட்சியில், துணை சபாநாயகர் அவர்களுடைய கோரிக்கைகளையும், தேவைகளையும் நிறைவேற்றுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு அமைச்சர் கே. ஆர்.பெரிய கருப்பன் பதிலளித்தார்.



திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் அவசர செயற்குழு கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் மு.பகலவன் தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்ட பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் திருவள்ளூர் கிழக்கு மாவட்டத்திற்கு கழக தலைவர் வருகை தருவது குறித்து பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார். இதில் ஜெ.மூர்த்தி, தமிழ் க.அமுதரசன், கே.ஜி.பாஸ்கர் சுந்தரம், ஜி.ஸ்டாலின், ஏ.ஆர்.டி. உதயசூரியன், ஏ.கே.சுரேஷ், மு.கதிரவன், கே.வி.ஜி.உமாமகேஸ்வரி, எம்.எல்.ரவி, எஸ்.ரமேஷ், பி.வெங்கடாசலபதி, ஏ.வி.ராமமூர்த்தி, உள்பட ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் அணிகளின் அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

## மின் உற்பத்தியைப் பெருக்க

# தமிழ்நாடு அரசு மிகத் தீவிர நடவடிக்கை!

## 'தினத்தந்தி' ஏடு பாராட்டு!

சென்னை, மார்ச் 22 -

தமிழ்நாட்டின் மின் ஆலைகளெல்லாம் மின் உற்பத்தியை முழு வீச்சில் தொடங்கியிருப்பதால்மின்சாரத்தட்டுப்பாடுவராது. மின்உற்பத்தியைபெருக்கதமிழ்நாடு அரசு மிகத் தீவிர நடவடிக்கை எடுத்துள்ளது என 'தினத்தந்தி' ஏடு 21.03.2025 தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

அது வருமாறு:

ஒரு மாநிலத்தின் வளர்ச்சிக்கு வித்தாக இருப்பது மின்சார உற்பத்திதான். ஒருபக்கம்அனைத்து வீடுகளிலும்மின்சாரம்என்பதை இலக்காகக்கொண்டு மத்தியமாநிலஅரசுகள்செயல்பட்டுவருகின்றன. தொழில்வளர்ச்சிக்கும்மின்சாரமேஅடிப்படைதேவையாகும். தொழில் தொடங்க முன்வரும் நிறுவனங்களின் முதல் கேள்வியே தடையில்லாத மின்சாரம் உங்கள் மாநிலத்தில் கிடைக்குமா? என்பதுதான். இந்த கேள்விக்கு சாதகமான பதில் கிடைப்பதால்தான் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுநிறுவனங்கள்தமிழ்நாட்டில் தொழிற்சாலைகள் அமைக்க தேடிவருகிறார்கள். தமிழ்நாடு அரசும் மின்சார உற்பத்தியைப்பெருக்கமிகதீவிரமாக நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

உலக நாடுகளும் பசுமை எரிசக்தியில் அதிக அக்கறை காட்டிவருகிறது. அதாவது, அனல் மின்சார நிலையங்களை தொடங்கினால் நிலக்கரி தட்டுப்பாடு

ஒரு பக்கம் இருந்தாலும், சுற்றுச்சூழல் மாசினாலும் பெரும் பாதிப்புஏற்படுகிறது. நிலக்கரிக்காகவும் வெளிமாநிலங்களையும், வெளிநாடுகளையும் சார்ந்து இருக்கவேண்டிய நிலையும் இருக்கிறது. ஆனால் பசுமை எரிசக்தி அதாவது சூரிய வெப்பத்தினால் மின்சார உற்பத்தி மற்றும்




காற்றாலை மின்சார உற்பத்தியினால் சுற்றுச்சூழலுக்கும் பாதிப்பு இல்லை, இயற்கையின் அருட்கொடையால் அதிக செலவில்லாமல்மின்சாரஉற்பத்தியும் செய்யப்படுகிறது.

தமிழ்நாட்டில் நல்ல வேளையாக காற்றுக்கும் பஞ்சமில்லை, சூரிய வெப்பத்துக்கும் பஞ்சமில்லை. பருவ காலங்களில் காற்றுஅதிகமாகவீசுகிறது. சூரிய வெப்பமும் வெயில் காலங்களில் மட்டுமல்லாமல்

ஆண்டுக்கு300நாட்களுக்கு மேல் தாராளமாக கிடைக்கிறது. இதை பயன்படுத்தி தமிழக அரசு தனியாரை ஊக்கு வித்து மானியம் மற்றும் சலுகைகளை அளித்துசூரியவெப்பத்தின்மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யும் நிலையங்களை தொடங்கிவருகிறது. அந்தவகையில், சமீபத்தில் நெல்லை மாவட்டம் கங்கை கொண்டான் சிப்காட் பூங்காவில் உலக புகழ்பெற்ற இந்திய குழுமமான டாடா குழுமத்தின் துணை நிறுவனமான டாடா பவர் நிறுவனம்ரூ.3,800கோடிமுதலீட்டில் 4 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் 4 ஆயிரத்து 300 மெகாவாட் மின்சாரத்தை சூரிய வெப்பம் மூலம் உற்பத்தி செய்யும்ஆலையைஅமைத்துள்ளது.

இந்த ஆலையை முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்துவைத்தார். இந்த ஆலையில் பணிபுரிபவர்களில் 80 சதவீதம் பேர்பெண்கள். இந்தஆலையை சுற்றி100கிலோமீட்டர்சுற்றளவில் வசிக்கும்பெண்கள்இந்தஆலையில் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர். இப்போது4,300மெகாவாட் மின் உற்பத்தி செய்யும் இந்த ஆலையில்எதிர்காலத்தில்8ஆயிரம் மெகாவாட் மின்சாரம் உற்பத்திசெய்யும்அளவுக்குவிரிவாக்கம் செய்யப்படும் என்று டாடா நிறுவன தலைவர் என்.சந்திரசேகரன் தெரிவித்தார். இந்தியாவிலேயே ஒரே இடத்தில் இவ்வளவு அதிகமாக மின்சாரம் உற்பத்தி செய்யும்நிலையங்களில்இதுவும் ஒன்றாகும்.

இந்தஆலைக்காக4.7,2022ல்புரிந்துணர்வுஒப்பந்தம்போடப்பட்டு, 20.10.2022ல் அடிக்கல் நாட்டப்பட்டு2ஆண்டுகளில்திறந்தும்

வைக்கப்பட்டுள்ளது மிகவும் சிறப்புக்குரியதாகும். இந்த ஆலைமட்டுமல்லாமல்அதேகங்கைகொண்டான்சிப்காட்தொழிற்பூங்காவில்ரூ.2,574கோடிசெலவில் 2,500 பேருக்கு வேலைவாய்ப்புஅளிக்கும்வகையிலான 3 ஆயிரம் மெகாவாட் மின் உற்பத்தி செய்யும் ஆலைக்காகவும்மு.க.ஸ்டாலின்அடிக்கல் நாட்டினார். இந்த ஆலைகளெல்லாம்மின்சாரஉற்பத்தியைமுழுவீச்சில் தொடங்கியபிறகு தமிழ்நாட்டில் மின்சார தட்டுப்பாடும் வராது, முதல் அமைச்சர் மு.க. ஸ்டாலின்சொன்னதுபோலதென் மாவட்டங்களில் தொழில் வளர்ச்சி புலிப்பாய்ச்சலாக இருக்கும் என்பதில் சந்தேகமே இல்லை.

இவ்வாறு தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### காட்டாங்கொளத்தூர் எம்.வி.இராமு

### மார்ச் 22 (2017)



காஞ்சிபுரம் மாவட்டம், காட்டாங்கொளத்தூர் ஒன்றியச் செயலாளராகவும், தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் தணிக்கைக்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

காட்டாங்கொளத்தூர் ஒன்றியக்குழுத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களில் கலந்து கொண்டதோடு, நெருக்கடிகால மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**